
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 3 | மார்ச் 1990 | இதழ் 3

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் தங்கி இருக்க நேர்ந்தால் தயவு செய்து கீழ்க்காணும் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு ஆசீர்வாதம் பெறுங்கள்.

ஞாயிறு காலை ஆராதனை : காலை 9-30 மணி
ஞாயிறு பள்ளி : பகல் 11 மணி
மாலை ஆராதனை : மாலை 7 மணி
வியாழன் : மாலை 7 மணி, வேத ஆய்வு
சனி : மாலை 7 மணி ஜெப ஆராதனை

ஒருவாரம் விட்டு ஒருவாரம் பெண்கள் ஐக்கிய சங்கக் கூட்டம் புதன் மாலை 4 மணியளவில் நடைபெறும்.

## இதழின் உள்ளே

1. இன்னும் எத்தனை காலம் ...?
2. சொல்லப்பட்டிருப்பதில் விருப்பமில்லாமை
3. மிகப் பிரபலமான சில ''பொய்கள்''
4. தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்
5. மாறிக் கொண்டிருக்கும் மானிடரும் மாறாத தெய்வீக நியமங்களும்
6. நில், சிந்தி, செயல்படு
7. நீ தேவனுடைய பிள்ளை ஆக விரும்புகிறாயா?
8. நம்முடைய நோக்கம்

# THIRUMARAI AASAAN

Editor :
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity:

Vol 3. March—1990 Issue 3


**ஆசிரியவுரை**

## இன்னும் எத்தனை காலம்...?

கிறிஸ்தவ மார்க்கத்தில் காணப்படும் குழப்பங்களுக்கு அடிப்படைக் காரணமே வேதாகமத்தைப் பகுத்துப் போதிக்காதது தான் என்றால் மிகையாகாது.

பரிசுத்த வேதாகமம் இரண்டு ஏற்பாடுகளால் ஆனது. ஒன்று பழைய ஏற்பாடு; மற்றொன்று புதிய ஏற்பாடு. ஏற்பாடு என்றால் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் என்று பொருள். அதாவது இரண்டு தரப்பினருக்கிடையே சில காரியங்களைச் செய்யும்படி பேசி முடிவு எடுத்து ஒப்பந்தம் செய்து கொள்வது ஆகும்.

பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை என்பது யெகோவா-வாகிய தேவனுக்கும் இஸ்ரவேல் நாட்டாருக்கும் இடையே ஏற்-படுத்தப்பட்ட தேசீய ஒப்பந்தம். உபா 5:1-3 அது இஸ்ரவேல-ரல்லாதவருக்குப் பொருந்தாது.

ஆனால் புதிய உடன்படிக்கை என்பது கிறிஸ்துவுக்கும்; உலகம் எங்கிலும் உள்ள (யூதர், புறஜாதியார் என்ற வேறுபாடு இன்றி) ஒவ்வொரு தனி நபருக்கும் இடையே செய்யப்பட்டிருக்கின்ற ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை, அதைத் தான் புதிய ஏற்பாடு என்கிறோம். ஏற்பாடு என்றால் என்னமோ ஏதோ என்று மலைக்க வேண்டாம்.

இந்த இரண்டு உடன்படிக்கைகளிலுமே சில நிபந்தனைகள் உண்டு. அதாவது நீ இப்படிச் செய்தால் நான் இன்னின்னதைத் தருவேன் - இதுதான் நிபந்தனை என்பது.

புதிய ஏற்பாட்டைப் பொறுத்த வரையில் அது நிபந்தனை என்ன? புதிய உடன்படிக்கையின் ஷரத்துகளுக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டுமே பாவ மன்னிப்புக் கிடைக்கும் என்று புதிய உடன்படிக்கை பற்றி தீர்க்கதரிசனம் உரைத்த எரேமியர் கூறுகிறார். மேலும், அவர் பழைய உடன்படிக்கையை புதிய உடன்படிக்கையோடு ஒப்பிட்டு அதிலுள்ள வித்தியாசங்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கும் பாவ மன்னிப்பு உண்டு என்றாலும் ஒருவனும் அந்த உடன்படிக்கையின் பிரமாணங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க இயலவில்லையாதலால் அது அருளப்படவில்லை. (அப் 13:39; ரோமர் 3:20; கலா 2:16; 3:10-12) அதாவது பழைய உடன்படிக்கை யாருக்கும் பாவ மன்னிப்பு அளிக்கவில்லை. ஆனால் புதிய ஏற்பாடு பாவ மன்னிப்பு அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. அது ஒரு வித்தியாசம் (எரே 31:34)

பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் வேறொரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. பழைய உடன்படிக்கையின்படி தேவனுக்கும், முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை ஆபிரகாமின் சந்ததியில் உதித்த மற்றவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆதி 17:1-14 வரை உள்ள வசனப் பகுதியில் ''நான் (தேவன்) உனக்கும் உனக்குப்பின் வரும் சந்ததியாருக்கும் தேவனாய் இருப்பேன் என்று ஆபிரகாமுக்கு வாக்களித்தார் ஆகவே ஆபிரகாமுடையசந்ததியார் பிறவியிலேயே, தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்துக்குச் சொந்தக் காரராகி விடுகிறார்கள். அந்த ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்பதற்கு அடையாளமாக அவர் சந்ததியில் பிறக்கிற ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்வித்தார்கள். ஆனால் அப்படி விருத்தசேதனம் செய்விக்கப் பட்ட குழந்தைகளுக்கு அந்த உடன்படிக்கையின் ஷரத்துகளைப் புரிந்து கொள்ளும் ஞானம் இருக்க நியாயமில்லை. பின்னர் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது யெகோவாவையும் அவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் பற்றிப் போதிக்கப்பட்டார்கள். இது ஒரு வகையில் நம்முடைய நாட்டில் முன்னொரு காலத்தில் நடைமுறையில் இருந்த பாலிய விவாகத்தைப் (குழந்தைத் திருமணம்) போன்றது. குழந்தைகளின் விருப்பத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் பெற்றோர்கள் தங்கள் கருத்தைத் திணிப்பது. விளைவு என்ன? அவர்கள் அந்த உடன் படிக்கையை விபரம் தெரிந்து விருப்பப்பட்டு ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் ''நான் அவர்களுக்கு நாயகராக இருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே''

என்று தேவன் வருத்தப்படுகிற அளவுக்கு அவர்கள் அந்த உடன்படிக்கையை அசட்டை செய்தார்கள்.

ஆகையால் தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அந்தப் புதிய உடன்படிக்கையின் படி "என்னுடைய (தேவன்) பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து அவர்களுடைய இருதயங்களிலே அவைகளை எழுதுவேன், நான் அவர்களின் தேவனாயிருப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் எல்லோரும் என்னை அறிவார்கள் (எபி 8:10,11.) மேற்சொல்லப்பட்டிருக்கிற வசனங்களின் கருத்து என்ன? போதிப்பதினாலும், கற்பிப்பதினாலும் ஒரு விஷயத்தை ஒருவன் மனதிலே பதிப்பிக்க முடியும். புதிய ஏற்பாட்டின் கீழ் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுவதின் மூலம் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை போதிக்கப்படுகிறது. சிறியோர் முதல் பெரியோர் வரை என்னை அறிவார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதின் கருத்து இதுதான். இங்கே ஒரு வித்தியாசத்தைக் கவனியுங்கள். பழைய உடன்படிக்கையின் படியும் மக்கள் போதிக்கப்பட்டார்கள். ஆனால் அதை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்கிற சுதந்திரம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் புதிய உடன்படிக்கையில் அந்த சுதந்தரம் உண்டு. ஒருவன் அதை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு கீழ்ப்படியலாம் அல்லது விட்டு விடலாம். கீழ்ப்படிகிறவர்களுக்கு பாவ மன்னிப்பு உண்டு; தேவனுடைய புத்திரர்கள் ஆகும் வாய்ப்பு உண்டு: கீழ்ப்படியாதவர்களுக்கு அது இல்லை, "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். (எபி8:12) இந்த வாக்குத் தத்தம் யாருக்கு? புதிய உடன்படிக்கையின் உபதேசங்களைக் கற்று தங்கள் இருதயங்களில் விசுவாசித்துக் கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டுமே. இந்தக் கருத்தை இயேசு கிறிஸ்து தம்முடைய பெரிய கட்டளையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். 'நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாய் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16) ஒருவனுக்கு விசுவாசம் எப்படி வரும்? என்பதை விளக்க அப்போஸ்தலன் பவுல் "விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்கிறார் (ரோமர் 10:17)

இரண்டு காரியங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவது, பழைய உடன்படிக்கையைக்கைக்கொள்ளுவதற்கு நாம்

யூதரல்ல-அதாவது ஆபிரகாமின் மாம்சீக வழித் தோன்றல்கள் அல்ல; இரண்டாவது பழைய உடன்படிக்கை மாற்றப்பட்டு புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்தாயிற்று எபி 8:13; கொலோ 2:14

இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் இன்னும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதின் மூலம், கர்த்தரே பிரயோஜனமற்றது, சரிபட்டு வரவில்லை என்று தள்ளிப்போட்ட பிரமாணத்துக்கு நீங்கள் புத்துயிர் கொடுக்கிற பாவத்தைச் செய்கிறீர்கள் என்று உணராதிருக்கிறீர்களே! அஞ்ஞானிகள் என்று நாம் வர்ணிக்கிற மக்கள் பால்ய விவாகம் நியாயமற்றது; சம்பந்தப் பட்டவர்களுடைய கருத்தைக் கேட்காமல் செய்யப்படும் காரியங்களுக்கு அவர்கள் உடன்பட வேண்டியதில்லை என்று புரிந்து கொண்டு அதைப் புறக்கணித்துப் போட்டார்கள். ஆனால் நாமோ, வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று கூறிக் கொண்டு ஆவிக்குரிய பால்ய விவாகமான குழந்தை ஞானஸ்நானத்தை விடாப்பிடியாய்ப் பற்றிக் கொண்டு சம்பந்தப்பட்ட குழந்தைகளுக்கு அநியாயம் செய்கிறோம்; தேவனுக்கும் எதிர்த்து நிற்கிறோம்.

அப்படி அவரவர்கள் இஷ்டத்துக்கு விட்டுவிட்டால் கிறிஸ்தவ மார்க்கம் அழிந்து போகும் அல்லது தேய்ந்து போகும் என்று ஒருவேளை நீங்கள் பயப்படுகிறீர்களா? கிறிஸ்தவம் கத்தி முனையிலும், கட்டாயத்திலும் வளர்க்கப்படுவதற்கு அது ஒன்றும் செத்த மார்க்கமல்ல; அது ஜீவனும் பெலனும் உள்ளது, வளரக்கூடியது. தேவனுடைய வார்த்தைகள் இருதயங்களை நொறுக்கும் சம்மட்டி, இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்தைக் காட்டிலும் கூர்மையானது, ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் உருவக் குத்தி, பிரிக்கும் வல்லமையுடையது, இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கக் கூடியது. அதை எடுத்து உபயோகித்து சத்துருவாகிய சாத்தானை வீழ்த்தாமல், உளுத்துப் போன கொள்கைகளை, மாயா ஜால வித்தைகளை, மோடி மஸ்தான் கையாளுகிற நாலாந்தர யுத்திகளைக் கையாண்டு கிறிஸ்தவத்தை வளர்க்கவும் நிலை நிறுத்தவும் முடியும் என்று நம்புகிற உங்களுக்கு ஐயோ!

இன்னும் எத்தனை காலம் தான் கிறிஸ்து நம்முடைய மதியீனத்தையும், நிர்விகாரப் போக்கையும் பொறுத்துக் கொண்டிருப்பார்

நண்பர்களே! தாய்க்குலமே! வாசி, சிந்தி, விரைந்து செயல்படு! காலம் சமீபமாய் வந்து கொண்டிருக்கிறது.

**E. Z. செல்வநாயகம்**

# சொல்லப்பட்டிருப்பதில் விருப்பமில்லாமை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டவர் என்றும் அவர் போதித்த யாவும் சத்தியம் என்றும் பெரும்பாலானோர் ஒத்துக் கொள்கின்றனர். ஆயினும், அன்றும் சரி, இன்றும் சரி, அப்படி ஒத்துக் கொள்கிற மக்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடு கேட்டு அதன்படி ஒழுக வேண்டும் என்று நினைப்பதில்லை.

முதலாவது அவருடைய சொந்த ஊர் மக்களே அவரைப் புறக்கணித்த கொடுமையை வேதத்தில் வாசித்து வேதனை அடைகிறோம். கேவலம், ஒரு ஏழைத் தச்சனுடைய மகன் கல்லாத ஒரு பயல் உன்னதத்திலிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனுடைய செய்தியை எடுத்து இயம்புகிறனாம்!. என்ன ஐயா, இது! யார் எதைச் சொல்ல வேண்டும், செய்ய வேண்டும் என்ற விவஸ்தையே கிடையாதா?'' என்று எண்ணி இடறலடைந்தனர். *(மத் 13:55-57)*

அவர் காலத்தில் வாழ்ந்த பக்தியுள்ள யூதர்களுக்கு ஓரளவு விஷயம் புரிந்தது அவர் சொல்லுவதில் நியாயம் இருக்கிறது என்று உணர்ந்தனர். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளவும், ஒத்துக் கொள்ளவும் பயப்பட்டார்கள்.

ஏனெனில், ''**அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையையும் அதிகமாய் விரும்பினார்கள்**'' யோவான் 12:42,43

இன்னும் சில பேர் குற்றம் கண்டு பிடிப்பதிலும் தவறான நோக்கம் கற்பிப்பதிலும் தங்கள் பொழுதைக் கழிப்பவர்கள். அவர்கள். ''**இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல**'' என்றார்கள். *(மத் 12:24)*

இப்படி மக்களின் பல்வேறு விதமான மனநிலைகளையும், கருத்துக்களையும் கண்டும், கேட்டும் வேதனையடைந்த இயேசு, சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஏசாயா தீர்க்கன் உரைத்த தீர்க்கதரிசன வசனங்களை மேற்கோள் காட்டி தன் வேதனையை வெளிப்படுத்துகிறார்.

**''காதாரக் கேட்டும் உணராதிருப்பீர்கள் கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும் காதுகளினால் கேளாமலும்**

**இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும் நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும், இருக்கும்படி-யாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது. காதால் மந்தமாய்க் கேட்டு தங்கள் கண்களை மூடிக் கொண்-டார்கள் என்பதே.**

**உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ள-வைகள்.**

**அநேக தீர்க்கதரிசிகளும், நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவை-களைக் கேட்கவும் விரும்பியும் காணாமலும், கேளாமலும். போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்''** *மத் 13 : 14-17*

*மற்ற மக்களின் நிலை தான் இப்படி என்றால் அவரைப் பின் பற்றி நடந்து அவருடைய உபதேசங்களைக் கேட்டு அவர் செய்த அற்புதங்களைக் கண்ட சீஷர்களாவது அவரைச் சரியாகப் புரிந்து கொண்டார்களா என்றால், இல்லை என்றே சொல்லத் தோன்று-கிறது. அவருடைய சிந்தனையோட்டமும், அவர் விளம்பின காரியங்களும் அவர்களுக்குமே புரியாத புதிராகவே இருந்திருக்-கின்றன.*

*பின்னொரு காலகட்டத்தில் அவருடைய சீஷர்கள், கர்த்தரு-டைய பந்தியில் கிறிஸ்துவினுடைய சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூறுவதைப் பற்றி அவர் விளக்கிச் சொன்ன போது அவர்களுக்குப் புரியவில்லை''.* **இது கடினமான உபதேசம்; யார் இதைக் கேட்பார்கள்? ''** *என்று சலிப்படைந்து பின் வாங்கிப் போயினர்.* **(யோவான் 6: 48-66.)**

*இன்னும் சில பேர் இவருடைய அற்புத அடையாளங்களைக் கண்டு வியந்து, இவர் அரசியல் ரீதியாக உரோமைப் பேரரசோடு மோதி, தாவீது அரசன் காலத்திலிருந்த இஸ்ரவேல் சாம்ராஜ்-யத்தை மீண்டும் நிறுவிப் பண்டையப்பெருமையை மீட்டுத் தருவார் என்று தவறாக எண்ணிக் கொண்டு அவர் பின்னால் அலைந்து திரிந்தார்கள் (யோவான் 6: 15-25; அப் 1:6)*

*வேறு சிலரோ, இவர் மக்களிடம் பெற்று வந்த பேரும் புகழையும் கண்டு எரிச்சலும் பொறாமையும் கொண்டனர்.*

*(யோவான் 12:19)*

இவைகளையெல்லாம் கவனிக்கும் போது உண்மையைச் சொல்வது கூட நாம் நினைக்கிற அளவுக்கு எளிதான காரியமல்ல என்று எண்ணத் தோன்றுகிறது. அதனால் தானோ என்னவோ இயேசு தன்னுடைய இயல்பான கனிவு நிறைந்த, ஆறுதல் உண்டாக்கும் வார்த்தைகளை விடுத்து, சற்று ஆத்திரம் கலந்த தொனியில் ''தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்கள் என்று சாடி பின்வரும் வருத்தம் தோய்ந்த உரை நிகழ்த்துகிறார்''. **ஆகையால் இதோ தீர்க்கதரிசிகளையும், ஞானிகளையும், வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன் அவர்களில் சிலரைக் கொன்று சிலுவையில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்.**

**நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும், பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலை செய்த பாகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும் பூமியின் மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப் பழியெல்லாம் உங்கள் மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள் இவைகள் எல்லாம் இந்தச் சந்ததியின் மேல் வரும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப் பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாய் நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன் உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்.**

**கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இது முதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்''** என்றார். **(மத் 23:34-39)**

இயேசுக் கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் தலைவர்களின் கட்டளைகளுக்கும் பாரம்பரியத்துக்கும் பசப்பு வார்த்தைகளுக்கும் செவி கொடுத்து இயேசுவின் போதனைகளை ஒதுக்கித் தள்ளினதுமன்றி அவருடைய சிலுவை மரணத்துக்கும் ஒப்புதல் அளித்தனர். அது மட்டுமல்ல அப்போஸ்தலன் யோவான் தவிர மற்ற அப்போஸ்தலர்களையும் மற்றும் பல ஆதிக் கிறிஸ்தவ

உண்மைத் தொண்டர்களையும் இம்சித்தும், கொன்றும் கொலை வெறியர்கள் ஆனார்கள்.

இன்றும் கூட இயேசுவின் போதனைகளை மக்கள் ஏற்றுக் கொள்ளாதபடி சத்துருவாகிய சாத்தான் மக்களை வஞ்சித்துக் கொண்டிருக்கிறான். முன்பு போல கத்தி முனையிலும், வன்முறைகளிலும் அவைகள் நடவாமல் இருக்கலாம். ஆனால் தந்திரமான சூழ்ச்சிகளினாலும், சட்டங்களின் பின் மறைந்து கொண்டும் பல இடையூறுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அநேகர் எழும்பி, கிறிஸ்துவின் தூய, உயர்ந்த உபதேச நெறிகளைத் திரித்தும், வளைத்தும் மாந்த அறிவால் மாசுபடுத்தியும் போதிக்கிறார்கள். அதை மக்கள் புரிந்து கொள்ளாமலும் புரிந்தும் தங்களுக்கு சாதகமாக இருப்பதால் ஏற்றுக் கொண்டு ஆரோக்கியமான உபதேசங்களை அசட்டை செய்கிறார்கள். இப்படிப்பட்ட மக்களுக்காக நாம் பரிதாபப்படுகிறோம் இவர்கள் தேவ கோபாக்கினைக்குத் தப்பித்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறார்களா? தயவு செய்து 1பேதுரு 4:17, 18 வசனங்கள் போதிக்கிற கருத்தைச் சிந்தித்துப் பார்த்து தெளிவு பெறுங்கள். மேலும் வேறொரு இடத்தில் **"என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயம் தீர்க்கிறது என்று இருக்கிறது. நான் சொன்ன வசனங்களே அவனைக் கடைசி நாளில் நியாயம் தீர்க்கும் என்கிறார்."** (யோவான் 12:48.)

இன்னும் ஒரு வேதனையுண்டாக்கும் நிலை என்னவென்றால், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை மீட்டு அமைப்போம் என்று சூளுரைத்துக் களம் புகுந்திருக்கின்ற சகோதரர்கள் கூட அவர்களுடைய கடமைகளையும், பொறுப்புகளையும் எடுத்துச் சொன்னால் அவ்வளவாய் விரும்புவதில்லை. உலக மக்களை ஆட்டிப்படைக்கும் விபச்சாரம், மதுபான வெறி, இழிவான ஆதாய நோக்கம் மற்றும் பல உலகியல் கோட்பாடுகளை விடுத்து ஆவியிலே வளர வேண்டும் அப்படி ஆவியிலேயே வளர வேண்டும் என்றால் திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாகயிருக்க வேண்டும். சபை கூடி வருதலை அசட்டை செய்யக் கூடாது என்று வலியுறுத்துவோமானால் முகம் சுழிக்கிறார்கள். இந்த அடிப்படைக் காரியங்களை எல்லாம் செய்யாமல் எப்படிக் கர்த்தருக்குப் பிரியமாயிருக்க முடியும்?

இன்னும் எவ்வளவு காலத்துக்கு இப்படி அனலும் இல்லாமல் குளிரும் இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்க முடியும்? ஒன்று சத்தியத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இல்லாவிட்டால் விட்டு விட வேண்டும். நின்றால் கர்த்தர் பக்கமே நிற்க வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு

எதிர் முகாமில் இருக்க வேண்டும். ஆற்றில் ஒரு கால் சேற்றிலே ஒரு கால்' என்னும் போக்கு அபாயகரமானது. நம்முடைய விசுவாச நிலை எப்படிப்பட்டது என்று நமக்குத் தெரியுமே. நமக்குத் தெரிகிறதோ இல்லையோ நிச்சயமாக நம்மைப் படைத்துப் பராமரிக்கிற தேவனுக்குத் தெரியும். **"இரண்டு எஜமான்களுக்கு ஒருவன் ஊழியம் செய்ய முடியாது"** (மத் 6:24) என்கிற இயேசுவின் கண்டிப்பும் **"என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிற படி செய்யாமல் போகிறதென்ன?** (லூக் 6:46) என்று இயேசு வேதனையோடு கேட்கிற கேள்விக்கும்'' உங்கள் பதில் என்ன? சிந்திப்பீர்!

**J.C. சோட்**

## குடியரசுத் தலைவர் கார்பீல்டு

அமெரிக்காவின் பழைய 'குடியரசுத் தலைவர் ஜேம்சு ஏ. கார்பீல்டு, கிறிஸ்துவின் திருச்சபையின் அங்கத்தினராக வாழ்ந்து இறந்தவர். ஒரு திருச்சபையில் சில ஆண்டுகளாகப் பிரசங்கியாராகவும் பணியாற்றினார். ஒரு முறை ஒரு சகோதரி அவரை, விசுவாசத்தில் நம்முடைய நிலைமையைப் பற்றி அவளுக்குத் திட்டமான ஒரு கருத்து உண்டாகத்தக்கவகையில் வாக்குமூலம் ஒன்று கொடுக்கும்படி வேண்டினாள். திரு. கார்பீல்டு கொடுத்த வாக்குமூலத்தின் ஒரு படி பின்வருமாறு :

1. நாங்கள் எங்களைக் கிறிஸ்தவர்கள் அல்லது சீடர்கள் என்று அழைத்துக்கொள்கிறோம்.

2. நாங்கள் பிதாவாகிய தேவனை நம்புகிறோம்.

3. நாங்கள், இயேசுவே கிறிஸ்து என்றும், உயிருள்ள தேவனுடைய திருக்குமாரன் என்றும் நம்முடைய இரட்சகர் என்றும் நம்புகிறோம். நாங்கள் கிறிஸ்துவின் தேவத்துவத்தைக் கிறிஸ்தவ ஒழுங்குமுறையின் அடிப்படை உண்மையாகப் பொருள்படுத்துகிறோம்.

# மிகப் பிரபலமான சில "பொய்கள்"

தேவன் பொய் பேசாதவர் (தீத்து 1:3). உண்மையைச் சொல்லப் போனால் "தேவனால் பொய் பேசுவது சாத்தியமல்ல (எபி 6 : 18), "சத்தியத்திற்கு எதிரானவற்றைப் புகழ்வதும் பொய் பேசுவதும் தவறு என சகல மக்களும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (யாக்கோபு 3:14; யோவான் 8 : 32; 17 :17). **"அவருக்குள் நிலைத்திருக்கிறோம் என நாம் சொல்லிக் கொண்டு, இருளிலே நடந்தால், நாம் பொய் சொல்லுகிறோம்; ஆனால் நாம் ஒளியிலே நடந்தால் (அவர் ஒளியாக இருப்பதால்) அவருள் நிலைத்திருக்கிறோம்; தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது சகல பாவங்களையும் கழுவிப் போடுகிறது. நாம் பாவமற்றவர்கள் எனக் கூறுவோமானல், நம்மையே ஏமாற்றிக்கொள்ளுகிறோம்; நம்மில் சத்தியமில்லை. நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டால், அவர் நம்பிக்கையுள்ளவரும் நீதிமானுமாக இருப்பதால், நமது பாவங்களை மன்னித்து, சகல கெட்ட செயல்களினின்றும் நம்மை சுத்தப்படுத்துகிறார். நாம் பாவம் செய்யவில்லை எனக் கூறுவோமானால், அவரை பொய்யராக்குகிறோம்; அவருடைய சத்திய வசனம் நம்மில் இல்லை."** (1 யோவான் 1 : 6-10).

மேலே குறிப்பிட்ட வசனங்கள் தேவனுடைய பிள்ளைகளுக்காக — கிறிஸ்தவர்களுக்காக — கூறப்பட்டவை; பாவச் சேற்றிலே மூழ்கி விடுதலை பெற விரும்பாதவர்களுக்காக அல்ல என்பதை நமது வாசகர்கள் புரிந்து கொள்ள நாம் விரும்புகிறோம். (எபே 2: 11-22; மார்க் 16: 15-16; அப்- 2: 36-38; 41-42, 47)

சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுவோர் பொய்யை எளிதில் விசுவாசிக்கின்றனர். (2தெசலோ 2: 10 - 12) **ஒரு முதிய** தீர்க்கதரிசியுடைய பொய்யானது ஒரு "தேவனுடைய பிள்ளை" யின் துர் அதிர்ஷ்டமான மரணத்திற்குக் காரணமாயிருந்தது. (1 ராஜாக்கள் 13:1;18): உண்மையிலே, தேவனுடைய சத்தியத்தையும் மனிதன் பொய்யாகமாற்றக்கூடும் (ரோமர் 1:25) தேவனிடத்திலும் கூட ஒருவனால் பொய் பேசக் கூடும் (அப் 5:4), "பொய்யின் பிதா சாத்தானைத் தவிர வேறு யாரும் அல்ல" (யோவான் 8:44)

மக்களிடையே அதிக பழக்கத்திலுள்ள சில பொய்கள் யா வை? இக்கேள்விக்கான பதிலை இரு பிரிவுகளாக நாம் காணுவோம்:

**முதலாவது பிரிவு:**

1. ''உனக்கு விருப்பமான சபையில் நீ சேர்ந்து கொள்.'' இயேசு கிறிஸ்துவின் சபை பற்றி உங்களுக்குத் தெரியாதா? அங்கு ''விரும்பும்'' சபைக்கு இடமில்லையே! கீழ்க்கண்ட வசனங்களை படித்துப் பார்க்க வேண்டுகிறோம். மத்தேயு 16 : 18-19; அப். 20 : 28 ; எபே. 1 : 22, 23; 4 : 4 - 6 ; 5: 23 - 32; அப் 2:47: உங்கள் வேதாகமத்தின்படி, ஒருவரும் தேவனுடைய சபையில் **சேரவில்லை !** (சேர்க்கப்பட்டார்கள், சேர்க்கப்படுகிறார்கள்.)

2. ''ஒருவன் விசுவாசிக்கும் அக்கணமே இரட்சிக்கப்படுகிறான்'' உங்கள் வேதாகமம் இவ்வாறு போதிக்கிறதா? தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் விசுவாசத்தாலேயே பாவிகள் இரட்சிக்கப்படுகின்றனர். (யோவான் 3:16, 36; யாக். 2:14-26; அப். 10:34-35). இவ்வாறாக, **விசுவாசம்** ''தேவனுடைய ஒரு கிரியை'' என விளக்கப்பட்டுள்ளது. (யோவான் 6:28,29.)

3. ''உன்னுடைய இருதயத்திலே தேவன் சமாதானத்தைப் பேசட்டும் ; நீ உன்னுடைய சொந்த இரட்சகராக தேவனை ஏற்றுக் கொள்''. பல போதகர்கள் அடிக்கடி கூறும் பிரபலமான காரியம் இது. ஆனால் உங்கள் வேதாகமம் இவ்வாறு கூறுகிறதா? வேதாகமத்தில் எந்த வசனமாவது இவ்வாறு கூறினால் எமக்குத் தெரியப் படுத்துங்கள். (மார்க் 16:16; அப். 2:36-38; ரோமர் 6:3-4, 17-18 ஆகிய வசனங்களை வாசித்துப்பாருங்கள்.)

4. ''தண்ணீர் தெளித்தலும் ஊற்றுதலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட ஞானஸ்நான முறைகள்''. பல நாணயமான மக்களும் இக் கூற்றை நம்புகின்றனர். ஆனால் உங்கள் வேதாகமம் இவ்வாறு கூறுவது எங்கே? தண்ணீரில் முழுகுவது தான் வேதாகமம் கூறு கிற ஒரே ஞானஸ்நான முறை (ரோமர் 6:3-4 ; கொலோ 2:12).

5. ''ஒருவன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுள்ளபடியால், ஞானஸ்நானம் பெற வேண்டும்''. புதிய ஏற்பாட்டில், இயேசு கிறிஸ்து-வின் கட்டளைப்படி, ஒருவன் இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் அவசியம். (மார்க் 16:16). ''பாவ மன்னிப்பு பெறுவதற்காக ஞானஸ்நானம் பெற வேண்டும்'' அப். 2:38. 'பாவ மன்னிப்பு பெற்றதால் ஞானஸ்நானம் பெறவேண்டும்'' என வேதாகமம் கூறவில்லை. துணியை வெளுத்த பிறகு சோப்பு போடுவது விவேகமான முறையா?

6. ''ஒரு பியானோ அல்லது ஆர்மோனியம் சபை ஆராதனையில் உபயோகிக்கப்படுதல் தவறான செயல் அல்ல'' என கூறப்படு-

கிறது. ஆனுல் வாத்தியக் கருவியின் உபயோகத்தை ஆராதனேக்கு தேவன் கட்டளையிடவில்லையே! ''ஆராதனேயின் பியானோவை ஏன் உபயோகிக்கிறீர்கள்?'' என ஒருவரிடம் கேட்டபோது, ''நாங்கள் அதன் இசையை விரும்புகிறோம்?'' என பதிலளித்தார். ஆனால் தேவன் அதை விரும்புகிறாரா? கிறிஸ்தவ ஆராதனையில் அதன் உபயோகத்தை ஒரு போதும் அவர் அனுமதிக்கவில்லை. (எபே. 5 : 19 ; கொலோ 3 : 16 ; 1கொரி 14 : 15). (நாங்கள் இசைக்கும், இசைக்கருவிகளுக்கும் விரோதிகள் அல்ல; கர்த்தருடைய கட்டளையை மாத்திரமே கடைப்பிடிக்க வேண்டும் என்பதே எங்கள் விசுவாச நிலை)

## இரண்டாவது பிரிவு :

1. பல சாக்கு போக்குகள் உண்மையில் பொய்களாக இருக்கின்றன. கடமையைச் செய்ய விருப்பமில்லாத போது நொண்டிச் சாக்குகளை அவிழ்த்து விடுகிறோம். (லூக் 14:15-24). ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை, சபை அங்கத்தினர் ஒருவர் மீன் பிடிக்கச் சென்று கொண்டிருந்தபோது, ''இந்நேரத்தில் நீங்கள் ஆராதனையில் இருக்க வேண்டுமே ''என அவரை நினைவு படுத்திய வேளை அவர் கூறிய பதில் என்ன தெரியுமா?'' ஆமாம். ஆனால் நான் வீட்டில் இருந்தாலுமே இன்று ஆராதனைக்கு என்னால் செல்ல முடியாது; ஏனென்றால் என் அருமை மனைவிக்கு உடல் நலமில்லை. அவளை தனியே விட்டு நான் அகல முடியாது! ஐயா, மீன் பிடிக்க, உமது மனைவியை விட்டு விட்டு வரமுடியும் என்றால், ஆராதனைக்கு விட்டு விட்டுப் போக முடியாதா? நொண்டிச் சாக்குகள் கூற சிரமப்படவேண்டியதில்லை. அவை எப்போதும் தாராளமாகக் கிடைக்கின்றன!

2. மற்றொருவர் சொல்லுகிறார். ''ஆமாம்; நான் குடிக்கிறேன் ஆனால் அது அவ்வளவு கெடுதி அல்ல. மேலும் எல்லோருமே தான் குடிக்கிறார்கள்''. எச் செயலையுமே நியாயப்படுத்தும் திறமைசாலி இவர்! விருந்துகளில் குடிப்பதை நியாயப்படுத்த வேதாகமச் சான்று தேடும் சிலரும் உள்ளனர். விருந்து குடியர்கள் இல்லையேல் மொடாக் குடியரும் இருக்க மாட்டார்களே. தேவனுடைய பார்வையில் விருந்துகளில் குடிப்பதும் ஒரு பாவமே; ஏனெனில், அது பிறர் குடிக்கத் தூண்டுதலாய் அமையுமே! பிறர் முன்னிலையில் கெட்ட அபிப்பிராயத்தை எந்த கிறிஸ்தவனும் ஏற்படுத்தக் கூடாது. (வெளி 21:8; கலாத் 5:19-21; நீதிமொழிகள் 23:29-35) ஒருவனை விபச்சாரம் செய்யத் தூண்டுவது எப்படி பாவமோ, அது போல பிறர் குடிக்கத் தூண்டுதலாக இருப்பதும் பாவமே.

3. ''ஆராதனைக்குத் தவறுவது பெரிய குற்றமல்ல; அது யாரையும் பாதிப்பதில்லையே! தனக்குத் தானே இவ்வாறு சமாதானம் சொல்லிக் கொள்ளுபவர் உண்டு. சாத்தான், பலரை பல சமயங்களில் இவ்வாறான எண்ணங்களால் ஏமாற்றுகிறான். நினைவிருக்கட்டும், இவ்வித நடவடிக்கை பற்றி தேவன் சிலவற்றைக் கூறுகிறார். எபி 10:25, 1 கொரி 16:1-2; அப் 20:7; வெளி 1:10). தேவனுடைய காரியத்தில் உங்களது ஆர்வத்தையும் உற்சாகத்தையும் அணைத்துப் போட ஒரு நிச்சயமான வழி உண்டு: அது தான் ஆராதனைக்கு வராமல் தவறிப் போவது.

4. ''நமது விருப்பம் போல வாழ உரிமை உண்டு'' என பலர் கூறுகின்றனர். ''நமது வாழ்க்கை முறையை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்'' என அவர்கள் சொல்கிறார்கள். திருமணம் செய்து பல தடவைகள் விவாகரத்து செய்வதும் இதில் அடக்கம். எந்த நீதி நெறிமுறையின் அடிப்படையில் தேவன் மானிட சமுதாயத்தைத் திட்டமிட்டிருந்தாரோ, அதையே இடித்து தகர்த்து விடுகிறது இவ்வித மனோ நிலை, எதிர்காலத்தில் நமது குடும்பங்களின் ஒழுக்க நிலை பற்றி மிகவும் கவலை தெரிவித்து ஒரு பெண்மணி பேசிக் கொண்டிருந்தார். அவர் அவ்வாறு சமுதாயத்தைப் பற்றி அக்கறையுடன் பேசிக் கொண்டிருந்த அதே சமயம், ஏற்கனவே நான்கு பேரை மணந்து ஐந்தாவது நபருடன் மணமாகாமல் வாழ்ந்து கொண்டிருந்தார் அப்பெண்மணி! ஒழுக்கத்தைப்பற்றி பேச இப்பெண்ணுக்கு என்ன உரிமை? ஆதியாகமம் 2:24-26; மத். 19:3-9; மார்க் 10:2-12 ஆகிய வசனங்களை கவனமாகப் படித்து அவற்றை வாழ்க்கையில் கடைபிடிக்க உங்களை அழைக்கிறோம்.

5. ''தேவனுடைய சபை வளர்ச்சிக்கு பண உதவி செய்ய இயலாத நிலையில் இருப்பதாக தங்கள் மனசாட்சியை சமாதானப்படுத்திக் கொள்ளும் சபை அங்கத்தினர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? (அப் 5:1-11). சபைக்கு உதவுதல் பற்றி புதிய ஏற்பாட்டில் 3 வார்த்தைகள் உள்ளன. திராணி, வருமானம், உற்சாகம் (அப். 11-29; 1கொரி 16:2; II கொரி 9:6-7). பலர் ஆடம்பர பங்களா கட்டிக்கொள்வர்; புதிய மாடல் கார் வைத்திருப்பார்கள்; விலையுயர்ந்த ஆடை அணிந்து கொள்வர்; ஐந்து நட்சத்திர ஹோட்டலிலே அருமையான உணவை ருசித்து சாப்பிடுவர்; ஆனால் தேவனுக்குக் கொடுக்கவோ அவர்கள் கைகள் ரொம்பவும் சுருங்கிப் போய் விடுகிறது. வெட்கம் ... வெட்கம்!!

மூலம்: W.A. ஹாலி தமிழில் S. S. ராஜன்.

# தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்

புராண இதிகாசங்களில் ஒரு கட்டுக் கதை உண்டு. அது, கடவுள் இரண்டு தூதர்களை பூலோகத்துக்கு அனுப்பினாராம். ஒரு தூதன் வேண்டுகோள் மனுக்களைச் சேகரிக்க வேண்டும். மற்ற தூதன் நன்றி தெரிவிக்கும் மனுக்களைச் சேகரிக்க வேண்டும்.

வேண்டுகோள் மனுக்களைச் சேகரிக்கிற தூதனுக்கு வெகு-விரைவில், தான் தூக்க முடியாத அளவுக்கு மனுக்கள் குவிந்து விட்டன. ஆனால் நன்றி தெரிவிக்கும் மனுக்களைச் சேகரிக்கிற தூதன், உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் போய்ச் சேகரித்தும் கூட ஒரு சில மனுக்களே கிடைத்தன.

ஆம், மக்களாகிய நாம் இன்னும் நமக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று நம்முடைய தேவைகளின் பட்டியலை நீட்டிக் கொண்டே போகிறோம். ஆனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்வதில் நாம் மிக மிகக் குறை வுள்ளவர்களாகவே இருக்கிறோம். எல்லாக் காலத்திலும் மனித இயல்பு இப்படியேதான் இருந்து வருகிறது என்று தோன்றுகிறது. இயேசுகிறிஸ்துவின் காலத்தில் கூட, குணமாக்கப்பட்ட பத்துக் குஷ்டரோகிகளில் ஒரே ஒரு குஷ்டரோகி மட்டும் தான் திரும்பி வந்து நன்றி சொன்னதாக லூக் 17:11-19ல் வாசிக்கிறோம்.

ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் அப்படியிருக்கலாகாது. அப்போஸ்தலன் பவுலை ஆட்கொண்டிருந்த ஆவி நமக்குள் இருக்கு மானால் தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுகளை அனுதினமும் அனுபவித்துக் கொண்டிருக்கிற நமக்கு, நன்றி சொல்வதற்கு வாய்ப்புகள் இல்லாமல் போகாது. நாம் நன்றிசொல்ல வேண்டிய சில கிருபைகளைப்பற்றி, பவுல் அப்போஸ்தலன் கொலோசே பட்டணத்துக் கிறிஸ்தவர்களோடு பகிர்ந்து கொண்டிருக்கிறார். நாமும் படித்துப் பயன் பெறுவோம். 1. ''தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். **நன்றியறிதலுள்ளவர்களுமாயிருங்கள்''**. 3:15

2. ''வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்-தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய **தேவனை ஸ்தோத்தரியுங்கள்''** 3:17.

3. ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்து கொண்டு,

நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு **ஸ்தோத்திரத்தோடே** அதிலே பெருகுவீர்களாக. 2:7

# மாறிக் கொண்டிருக்கும் மானிடரும் மாறாத தெய்வீக நியமங்களும்

தற்காலத்தில் மக்களுடைய மனநிலைகள் வேகமாக மாறிக் கொண்டு வருகின்றன. உத்தரவுகளையும், கண்டிப்புகளையும் வெறுக்கிறார்கள். தயவாகவும் பவ்யமாகவும் சொல்வதையே விரும்புகிறார்கள். பட்டாளத்தில் கூட முன்பு இருந்த கண்டிப்பும், கருரும் கிடையாது. கடன், மற்றும் லேவா தேவி முறைகளில் கூட மாற்றம் வந்து விட்டது. முன்பெல்லாம் கடன் கொடுத்தவன் அதிகார தோரணையில், குறிப்பிட்ட தேதியில் நீங்கள் வாங்கின கடனை அசலும் வட்டியுமாக கொடுத்துத்தீர்க்க வேண்டும் என்று நோட்டீசு அனுப்புவான். இப்பொழுதெல்லாம் அப்படி இல்லை. எங்களுக்குக் கொஞ்சம் பண முடையாக இருப்பதால் தாங்கள் எங்களிடம் பெற்றிருக்கிற தொகையை குறிப்பிட்ட தேதியிலோ அல்லது தங்களுக்குச் சௌகரியமான வேறொரு தேதியிலோ கொடுத்து உதவுங்கள் என்று கெஞ்சாக் குறையாக குழைந்து எழுத வேண்டியதாயிருக்கிறது.

இப்படி மனநிலை மாறி வருவதினால், பரிசுத்த வேதாகமம் ''செய்ய வேண்டும், நடக்க வேண்டும்'' என்று அழுத்திச் சொல்லுகிற சொற்றொடர்களை வாசிக்க நேரும் நம்முடைய இளைய தலைமுறைகள் கொஞ்சம் முகம் சுழிக்கிறார்கள் தற்கால உலகம் வியாபார ரீதியில் என்ன மாதிரி அணுகுமுறைகளை வேண்டுமானாலும் பின்பற்றிக் கொள்ளட்டும். அதைப்பற்றி நமக்குப் புகார் ஒன்றுமில்லை. ஆனால் கர்த்தருடைய வார்த்தைகளில் காணப்படும் ''செய்ய வேண்டும், கீழ்படிய வேண்டும்'' என்று கூறும் சொற்றொடர்களை நீக்கிப் போட்டு கொஞ்சம் தயவான வேண்டுகோள்களை உட்புகுத்த வேண்டும் என்று ஒருவர் வாதாடினால் அதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் கர்த்தர் எல்லாக் காலத்துக்கும் பொருந்துகிற மாற்றுவதற்கு அவசியமில்லாத வார்த்தைகளைத் தான் தேர்ந்தெடுத்து உபயோகித்திருக்கிறார்.

''இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்கப் பிரசங்கி வகை தேடினான்; எழுதின வாக்கியங்கள் செவ்வையும் சத்தியமுமானவைகள்''. பிர 12:10 என்பதை வாசித்துச் சிந்தியுங்கள்.

உதாரணத்துக்குச் சில :

1. ''தேவனுக்குப் பிரியமான ஒரு ஆராதனையை ஏறெடுக்க ஒருவன் விரும்பினால் அவன் ஆவியோடும், உண்மையோடும்

தொழுது கொள்ள வேண்டும், யோவான் 4:24. இதில் ஏதை-யாவது மாற்றினால் தேவ கட்டளையை எப்படி நிறைவேற்றுவது? அதனால் தான் "கூட்டாதே, குறைக்காதே" என்று முன்பே எச்-சரித்திருக்கிறார். வெளி 22:18,19.

2. அப்போஸ்தலன் பவுலின் இரட்சிப்பைப் பற்றிக் கூறும் போது (அப் 9:6-18; அப் 22:16) "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்-தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்-கள் போகக் கழுவப்படு என்று கட்டளையிடுகிறார். இதை தங்கள் சௌகரியத்துக்கு மாற்றிப் போதித்தால் தேவ கோபாக்கினைக்கு தப்ப முடியாது.

3. பாபிலோனிலிருந்து தாய்நாடு திரும்பிய மக்களுக்கு எஸ்றாவின் கட்டளை, "நீங்கள் தேவனுடைய ஆலோசனைக்கு விரோதமாக மணந்து கொண்ட, அந்நிய ஸ்திரீகளை விட்டு விலகுங்கள்" என்-கிறார். "அவர்களும் அப்படியே செய்வோம்" என்று கீழ்ப்படி-கிறார்கள். எஸ்றா 10:9-12. ஏனெனில் கர்த்தருடைய சொல்லைத் தட்டினதினால் அவர்கள் பட்ட துன்பம் அவர்களுக்குத் தெரியும்.

4. சபையில் மூப்பர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்களுக்கு உரிய தகுதிகள் பற்றிக் கூறும்போது, மூப்பனாக விரும்புகிற ஒருவன் என்னென்ன தகுதிகளையுடையவனாக இருக்க வேண்டும் என்ற பட்டியலே இருக்கிறது. 1தீமோ 3:2-11; தீத்து 1:6-9. ஆனால் மனிதர்கள் தங்களுக்கு இஷ்டமானபடி அதை மாற்றி பதவியின் விதிகளைத் தளர்த்தி அப்பதவிகளின் கண்ணியத்தைக் குலைத்து போடுகிறார்கள், விளைவு? சபையில் அடிதடி சண்டை-கள், போட்டி பொறாமை, பதவி மோகம் என்று பல விதமான முறை கேடுகளை நாம் கண்டும், கேட்டும் அனுபவித்தும் வரு-கிறோம்.

ஆகவே, நாம் சாமுவேல் பிள்ளையாண்டான் சொன்னது போல் "சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்ற மனநிலை-யை வளர்த்துக் கொள்ள வேண்டும். (1சாமு 3:10) அதை விடுத்து லோத்தைப் போல "அப்படியல்ல ஆண்டவரே" என்று தேவனுக்கே ஆலோசனை சொல்ல முற்படுவோமானால், "லோத்தின் மனைவி-யை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று வேதம் கூறுகிற எச்-சரிப்புத் தான் நமக்கும் (லூக் 17:32)

**கார்ல் B. கார்னர்**

# நில், சிந்தி, செயல்படு

கிறிஸ்தவ நண்பர்களே! (சகோதரர்களே என்று அழைக்க முடியாமைக்கு மன்னிக்கவும்)

இயேசு கிறிஸ்து ''என் சபையைக் கட்டுவேன், ''பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' என்று கூறினார். (மத் 16:18) இங்கே 'சபை' என்று ஒருமையில் சொல்லப்பட்டிருப்பது இலக்கணப் பிழையல்ல. பொருள் பொதிந்த சொல்.

இயேசு கிறிஸ்து ஒன்றைச் சொன்னால் அது நடந்தே தீரும் என்று நம்மை விட பிசாசுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே என்ன செய்தால் இயேசு கிறிஸ்துவின் திட்டத்தை முறியடிக்கலாம் என்று சாத்தான் யோசித்தான். இயேசு கிறிஸ்து தன் சபையைக் கட்டு-வதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் அவருடைய சபையைப் போன்ற பல போலிச் சபைகளை உருவாக்கி எது உண்மையான சபை என்று கண்டு பிடிக்க முடியாதபடி மக்கள் மத்தியிலே குழப்பத்தை உண்டாக்குவேன் என்று தீர்மானித்துத் தான் நாளொரு சபையையும் பொழுதொரு இயக்கங்களையும் உண்டாக்-கிக் கொண்டிருக்கிறான். இதை நான் எழுதி முடிப்பதற்குள்ளாக வேறொரு சபையை உருவாக்கி இருக்கிற எண்ணிக்கையோடு இன்னும் ஒன்றைக் கூட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சும்மா சொல்ல முடியாது. தான் மேற் கொண்ட பணியில் சாத்தானைப் போல கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள் மிக மிக அரிது.

ஆகவே நண்பனே, நான் உன் மீது குற்றம் சாட்டவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் யூதர்களைப் பற்றிக் கூறுவதைப் போல ''தேவனைப் பற்றி உங்களுக்கு வைராக்கியம் உண்டென்று அறி-வேன். ஆகிலும் அது அறிவுக் கேற்ற வைராக்கியமல்ல'' (ரோமர் 10:2) என்பதே என் மனக்குறையும் கூட.

ஆகவே, உங்கள் தீர்மானம் என்ன?

''காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்கள் ஆராய்ந்து பார்த்து (அப்-17:11) எல்லாவற்றையும் சோதித்து பார்த்து நலமானதைப்பிடித்துக் கொள்ள (1தெச 5:21) உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம் விலை மதியாத ரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த (அப் 20:28) சரீரமாகிய (எபே 1:23) அந்த ஒரே சபையில் அங்கமாயிருக்கிறாயா?

அந்த ஒரே சபை எது என்று தெரியாமல் சிரமப்படுகிறாய் என்று எண்ணுகிறேன் இதோ, சபைகள் என்ற பெயரால் செயல் பட்டுக் கொண்டிருக்கும் ஸ்தாபனங்களில் முக்கியமான சில வற்றைக் கீழே கொடுத்திருக்கிறேன். அதில் எது அந்த உண்மையான சபை யாக இருக்கும் என்று அடையாளம் கண்டு பிடித்து, அதிலே அங்கமாக அவசரமாய் செயல்படு. கர்த்தருடைய வருகை சமீபித்துக் கொண்டிருக்கிறது. மேலும் நம்முடைய வாழ்க்கைக்கும் ஒரு உத்தரவாதம் கிடையாதே!

1. சபையின் பெயர் : கிறிஸ்துவின் சபை ரோமர் 16:16.

ஸ்தாபகர் : கிறிஸ்து. மத் 16:18

வருடம் : கி. பி. 33 (இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த முதல் பெந்தகோஸ்தே) அப் 2. காண்க

இடம் : எருசலேம். ஏசாயா 2:2

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையின் தோற்றம், பெயர் ஸ்தாபகர், சட்டதிட்டங்கள் யாவும் தெளிவாக திட்டமாக எழுதப்பட்டுள்ளது.

2. சபையின் பெயர் : ரோமன் கத்தோலிக்க சபை

ஸ்தாபகர் : மூன்றாம் போனிபஸ் என்ற (Bonafice) முழு வளர்ச்சியடைந்த முதல் போப்,

வருடம் : கி.பி. 606.

இடம் : உரோமாபுரி.

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

3. சபையின் பெயர் : லுத்தரன் சபை.

ஸ்தாபகர் : மார்ட்டின் லுத்தர்,

வருடம் : கி.பி. 1530,

இடம் : ஆக்ஸ்பர்க் (ஜெர்மனி)

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

4. சபையின் பெயர் : பிரஸ்ட்ட்டேரியன் (கால்வினிசம்)

ஸ்தாபகர் : ஜான்கால்வின்.

வருடம் : கி.பி. 1535.

இடம் : ஸ்விட்சர்லாந்து

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

5. சபையின் பெயர் : எப்பிஸ்கோப்பல் (அ) லண்டன் மிஷன்

ஸ்தாபகர் : மன்னர் எட்டாம் ஹென்றி

வருடம : கி. பி. 1535

இடம் : லண்டன்

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

6. சபையின் பெயர் : பேப்டிஸ்ட் (ஒரிஜினல்)

ஸ்தாபகர் : ஜான்ஸ்மித்

வருடம் : கி.பி. 1607.

இடம் : லண்டன்.

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

7. சபையின் பெயர் : பேப்டிஸ்ட் (அமெரிக்கா)

ஸ்தாபகர் ; ரோகர் வில்லியம்ஸ்

வருடம் : கி.பி. 1639

இடம் : பிராஷடென்ல் (அமெரிக்கா)

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

8. சபையின் பெயர் : மெதடிஸ்ட்

ஸ்தாபகர் : ஜான் வெஸ்லிபால்

வருடம் : கி.பி. 1729

இடம் : லண்டன்

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை,

9. சபையின் பெயர் ; மார்மன்

ஸ்தாபகர் : ஜோசப் ஸ்மித்

வருடம் : கி.பி. 1830

இடம் : நியூ யார்க்

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

10. சபையின் பெயர் : அட்வெண்டிசம்

ஸ்தாபகர் : வில்லியம் மில்லர்

வருடம் : கி.பி. 1831

இடம் : மெச சூட்டால் (அமெரிக்கா.)

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

11. சபையின் பெயர் : ஏழாம் நாள் சபை (SDA)

ஸ்தாபகர் : திரு & திருமதி ஜேம்ஸ் ஒய்ட்

வருடம் : கி.பி. 1846

இடம் — ?

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

12. சபையின் பெயர் : கிறிஸ்தவ விஞ்ஞான சபை

ஸ்தாபகர் : திருமதி மேரி பேக்கர் எடி

வருடம் : கி.பி. 1879

இடம் : போஸ்டன்.

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

13. சபையின் பெயர் : ஹோலினஸ் சபை

ஸ்தாபகர் : ஹவ், கூப்பர்

வருடம் : கி.பி. 1907

இடம் : சிகாகோ

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

14 சபையின் பெயர் : அசெம்பிலீஸ் ஆப் காட்

ஸ்தாபகர் : ..........!

வருடம் : கி.பி. 1914

இடம் : ஹாட் ஸ்பிரிங்.

பரிசுத்த வேதாகமத்தில் இந்தச் சபையைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை.

**K.M. பீட்டர்**

சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

ஏனெனில், என் சகோதரரே உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது.

# நீ தேவனுடைய பிள்ளை ஆகவிரும்புகிருயா ?

சாத்தானின் கெடுமதியால் பாவச் சேற்றின் ஆழத்திலே அமுக்கப்பட்டு வேதனைப் பெருமூச்சு விடுகின்ற பரிதாபத்துக்குரியவனே! தேவன் உன்னை நேசிக்கிறார் என்கிற இரகசியம் உனக்குத் தெரியுமா? ஆம் நண்பனே! அருமைத் தாயே! தேவன் உன்னைப் படைத்த போது இப்படி துன்பப்படவும், வியாதிப்படவும் மரணம் அடையவும் வேண்டுமென்று எண்ணியதே இல்லை. இவைகள் உன்னுடைய ஆதித்தகப்பனும், தாயும் தங்களுக்கு வருவித்துக் கொண்ட வேதனைகள். இதிலிருந்து விடுபடவே முடியாதா? முடியும். மீணடும் நீ தேவனோடு உன் உறவைப் புதுப்பித்துக் கொண்டு தேவன் உடைய பிள்ளையாக மாறமுடியும். முதியவரே, தாய்மாரே, இளந்தலைமுறையே! நீ தேவன் உடைய பிள்ளையாக வேண்டுமென்று விரும்புகிறாயா?

அப்படியானால், ''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்''. என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் யோவான் 14:16 என்று கூறுகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆலோசனைகள் அடங்கிய பரிசுத்த வேதாகமம் கூறுவதற்குக் கீழ்படியுங்கள்.

## நீ அவருடைய சொல்லைக் கேட்டு விசுவாசிக்க வேண்டும்

அ) விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்று அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க லேண்டும். எபி 11:6

ஆ) விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கு என்று அந்த சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. ரோமர் 1:17

## நீ உன் பாவங்களுக்காக மெய் மனஸ்தாப்பட வேண்டும்

அ) ''அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்'' லூக் 13:3

ஆ) அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போல் இருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டும் என்று எங்கு உள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார். அப் 17:30

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை மனுவுர் முன்பாக அறிக்கையிட வேண்டும்**

அ) மனுவுர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் மத் 10:32

ஆ) கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் ரோமர் 10:9

**நீ கிறிஸ்துவோடு ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்பட வேண்டும்.**

அ) அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம் ரோமர் 6:4

ஆ) நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப் 2:38

இ) அவருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் அப் 2:41.

ஈ) அதற்கு ஒப்பான ஞானஸ்நானமானது.. அப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த் தெழுதலினால் இரட்சிக்கிறது. 1பேதுரு 3:21

**மேலே கூறப்பட்டுள்ள நான்கு காரியங்களையும் நீங்கள் நிறைவேற்றும் பொழுது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறீர்கள்.**

அ) அவனுடைய வார்த்தைகளை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் அப் 2:41

ஆ) இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் 2;47.

இ) நாம் .... எல்லாரும் ஒரே ஆவியினலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். 1கொரி 12:13.

**இவ்வாறாக நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்க்கப்பட்ட பிறகு விசுவாசமுள்ள சகோதரர்களுடன் இணைந்து தேவனைத் துதிக்கவும் அவருக்காக சேவை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.**

அ) சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். எபி 10:25.

ஆ) கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். ரோமர் 16:16

புதிய ஏற்பாட்டில் சபை என்பது கீழ்க்காணும் மறுபெயர்களையும் கொண்டது.

| | |
|---|---|
| தேவனுடைய ஆலயம் | 1 கொரி 3:16 |
| கிறிஸ்துவின் மணவாட்டி | எபே 5:21-32 |
| கிறிஸ்துவின் சரீரம் | கொலோ 1:24, எபே 1:22-23 |
| தேவனுடைய ராஜ்யம் | கொலோ 1:13 |
| தேவனுடைய வீடு | 1 தீமோ 3:15 |
| சபை | எபே 3:10 |
| முதற் பேறானவர்களின் சங்கம் | எபி 12:23 |
| கிறிஸ்துவின் சபை | ரோமர் 16:16 |

# நம்முடைய நோக்கம்

இப்பொழுது இயங்கிக் கொண்டு இருக்கின்ற பல பெயர்ப் பிரிவுத் திருச்சபைகளோடு இன்னும் ஒன்றைச் சேர்க்க வேண்டும் என்பது நம்முடைய குறிக்கோள் அன்று. சபைகள் என்று சொல்லபடுகிற அவைகள் கிறிஸ்துவின் போதனைக்கும் அவருடைய அப்போஸ்தலர்களின் போதனைக்கும் மாறுபாடானது. (1 கொரிந்தியர் 1:10, 11;யோவான் 17:21). பிரிவினை பாராட்டும் ''ஷீபோலேத்துக்களை'' வற்புறுத்தும் காலம் நீடிக்கும் வரைக்கும், ஒருபோதும்உலகம் கிறிஸ்துவினிடம் வழி நடத்தப்பட மாட்டாது. (இயேசுவின் ஜெபம் யோவான் 17), சேனைத் திரளான கிறிஸ்தவர்களின் ஆர்வம் ஜெபம் எல்லாம் மனிதர்களுடைய போதனைகளைத் தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் காலத்திலிருந்த திருச்சபைக்குத் திரும்பிப் போக வேண்டும் என்பது தான்.

**இதன் அடிப்படையில் நம்முடைய நோக்கம் பினவருமாறு :**

1. ஆதிக் கிறிஸ்தவ மார்க்கத்தைப் திரும்பப்பெறுதல், இதன் பயனுகக் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் ஒரே திருச்சரீரமாக ஒற்றுமைப்படுதல் (யோவான் 17:21).

2. கிறிஸ்துவை, போட்டியிட்டுக் கொண்டிருக்கும் சகல சமயப் பிரிவினைகளுக்கும் மேலாகவும், அவருடைய திருவசனத்தை சகல விசுவாசச் சட்டங்களுக்கு மேலாகவும உயர்த்துதல்.

3. இயேசு கிறிஸ்துவின் திருச்சபையினை, பிரிவினைப் பெயர் இல்லாமலும், மனித ஞானத்தால் உருவான விசுவாசப்பிரமாணமோ அல்லது கிறிஸ்தவ ஒற்றுமைக்குத் தடங்கலாக நிற்கக்கூடிய வேறு எதுவுமோ இல்லாதவாறும் ஏற்படுத்துதல், அதனுடைய ஐக்கியத்தின் வரையறைகள், புதிய ஏற்பாடு வகுத்தருளியுள்ள இரட்சிப்பின் விதிகளின் விரிவினை உடையனவாகவும் அவற்றோடு முழுதும் ஒத்தவைகளுமாயிருக்கச் செய்தல்.

4. புதிய ஏற்பாட்டின் தெளிவான போதனையின் ஒளியைக் கொண்டு மக்களைக் கிறிஸ்துவினிடம் வழி நடத்துதல்.

மூலாதாரமான உயிர்நிலை போதனைகளில் நாம் புதிய ஏற்பாட்டின் ஒப்புதலை நாடுகிறோம்; பிறவற்றில் மிகுந்த உரிமைச் சலுகைக்கு இடங்கொடுக்கிறோம். ''வேதாகமம் பேசுகிற இடத்தில் நாங்கள் பேசுகிறோம்; வேதாகமம் பேசாத இடத்தில் நாங்களும் பேசாமல் இருக்கிறோம்.

## நம்முடைய தொடக்கம்

கி.பி. 33இல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் வந்த முதல் பெந்தகொஸ்தே திருநாளன்று திருச்சபை உலகத்தில் வாழ்வியல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டடது. அதனுடைய அமைப்பையும், அதனுடைய போதனைகளையும் கனிகளையும் அறிவதற்கும் அப்போஸ்தலர் நடபடிகளின் ஆகமத்தைப் படியுங்கள். திருச்சபையானது, இருநூறு ஆண்டுகள் வரையில் அப்போஸ்தல உபதேசத்தை உண்மையாய்க் கடைப்பிடித்து வந்தது. ஆனால் யூதபோதனையின் கலப்பாலும், புறச்சமயக் கருத்துகளின் கலப்பாலும், அரசியல் சூழ்ச்சிகளாலும்ஆதியில் இருந்த திருச்சபை தடம் புரண்டது. அறியாமையும் மூடபக்தியும் நிறைந்த நூற்றாண்டுகள் பல கடந்தன. இக்காலத்திலேதான் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை, கிறிஸ்துவின் திருச்சபையின் இடத்தைப் பற்றிக் கொண்டது.

பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் மார்ட்டின்லுத்தர். பூட்டியிருந்த விலங்குகளை தகர்த்தெடுத்துவிட்டு திறந்த வேதாகமத்தை உலகத்திற்கு அளித்தார். பின்னர் கால்வின் தேவ இராச தத்துவத்தை குறித்துப் பரிந்து வாதாடினார். ஜான்வெஸ்லி திருச்சபைகளில் ஆவியின் அனல் நிறைந்த வாழ்க்கை மிகுதிப்பட வேண்டும் என்ற விவாத உணர்ச்சியைத் தூண்டினார். இந்தச் சிந்தனைகளின்விளைவாக பல பெயர்ப்பிரிவுத் திருச்சபைகள் தோன்றலாயின. மக்கள் பழைய வழிகளைத் தேடிக்கொண்டிருந்தாகள். எல்லாத் திருச்சபைகளும் நன்மையைச் செய்து கொண்டிருந்த போதிலும், வேதாகமத்தின் பெரும் பகுதியை தங்களுடைய போதனையாகக் கொண்டிருந்த போதிலும், நல்ல மனிதர்களைப் பெற்றிருந்த போதிலும் அவர்கள் பிரிந்து இருந்த படியினால் பெலனற்று இடையூறுகளுக்குள்ளாயினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலகத்தின் பல பாகங்களில் இருந்த திருச்சபைகளுக்குள்ளே பொதுவான ஓர் அமைதியின்மை தாண்டவமாடியது. இக்காலத்தில் எல்லாப் பெயர் பிரிவுத் திருச்சபைகளுக்குள்ளேயும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் மனிதர்களுடைய பாரம்பரியங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் புதிய ஏற்பாட்டில் முழு விவரத்துடன் கூறப்பட்டு இருக்கும் திருச்சபைக்குத் திரும்பிப் போக வேண்டும் என்னும் கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் பலர் இருந்தனர். **தோமசு கேம்பலும்** கிளாசுகோ பல்கலைக் கழகத்தில் படித்த இளைஞனுமான அவருடைய மகன் **அலெக்சாந்தரும்** இந்த எண்ணிக்கையில் அடங்குவர். தந்தையும் மகனும் பிரசுபிடீரியன் திருச்சபையின்

சிசீடர்சு கிளைப்பிரிவினைச் சேர்ந்த அங்கத்தினர்கள். ''அவர்கள் அப்போஸ்தலர்கள் விட்டுச் சென்றவாரே ஆவிக்குரிய காரியங்களை எடுத்துக்கொள்ள முற்பட்டனர்; இவ்வாறாக, இடைப்பட்ட காலங்களின் இக்கட்டுகளிலிருந்து விடுபட்டுத் தொடக்கத்திலே திருச்சபை எந்த ஆதாரங்களின்மீது நிலைத்து நின்றிருந்ததோ, அவற்றையே அத்தாட்சியாகக்கொண்டு நிலையாக நின்றனர்'' அவர்கள் இன்னொரு திருச்சபையைத் தொடங்குவதற்கு முற்படவில்லை; ஆனால் புதிய ஏற்பாட்டின் திருச்சபைக்குத் திரும்பிப் போவோம் வாருங்கள் என்று மக்களைக் கூவி அழைத்தனர். அவர்கள் வெறும் சீர்திருத்தக்காரரர்கள் அல்ல.

முதலாம் நூற்றாண்டில் இருந்த ஆதிச் சபையினர் கடைப்பிடித்தவைகளை மட்டுமே நாமும் கடைப்பிடிக்க வேண்டும். பிற்காலத்தில் மாந்த அறிவால் உட்புகுத்தப்பட்ட அனைத்துக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அகற்றி கிறிஸ்துவத்தைத் தூய்மைப் படுத்த வேண்டும் என்று தீவிரம் காட்டினர். அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்று சிந்திக்கிற மக்கள் அவர்கள் நிலையை ஏற்றுக் கொண்டு உலகெங்கிலும் தூயக் கிறிஸ்த்வத்தை மீட்டுஅமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீங்களும் ஏன் இதைப் பற்றி சிந்திக்கக் கூடாது?

வேதாகமத்தில் சபை உறுப்பினர்கள் பின்வரும் பெயர்களால் அழைக்கப் பட்டார்கள் :

| | |
|---|---|
| அங்கத்தினர்கள் | 1கொரி 12:27 |
| சீஷர்கள் | அப் 6:1 |
| விசுவாசிகள் | அப் 5:14, 6:15 |
| பரிசுத்தவான்கள் | அப் 9:13, ரோமர் 1:7 |
| ஆசாரியர்கள் | 1பேது 2:9, வெளி 1:16 |
| கிறிஸ்தவர்கள் | அப் 11:26; 26:28,29: 1 பேது 4:16 |

தங்களைக் கத்தோலிக்கர், லூத்தரன், சி. எஸ். ஐ. பாப்திஸ்து, மார்மன், ஏழாம் நாள், பெந்தே கொஸ்தே சபையார் என்று அழைத்துக் கொள்வது இயேசுகிறிஸ்துவுக்கும் தேவனுக்கும் பிரியமாயிருக்குமா?

# திருமறை ஆசான் உரிமை பற்றிய அறிக்கை

திருமறை ஆசான் திங்களிதழ். விதிப்படிவம். IV

வெளியிடும் இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

அச்சிடுவோர் பெயரும், முகவரியும் } D. தேவராஜ் ஜீவசக்தி பிரஸ் கிருஷ்ணம்பாளையம் ஈரோடு-638 003

வெளியிடுவோர் பெயர்: } **ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

இந்தியக் குடிமகனா? ஆம்.

முகவரி : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

ஆசிரியர் பெயர் : **E.Z, செல்வநாயகம்**

இந்தியக் குடிமகனா? ஆம்.

முகவரி 2, மணல்மேடு வீதி, ஈரோடு 638 002

இதழுக்கு உரியவர் பெயரும், முகவரியும்: } **ஈரோடு கிறிஸ்துவின் சபையார்** 2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002

இந்தியக் குடிமகனா? ஆம்

முகவரி : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

E. Z. செல்வநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விவரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

ஈரோடு
20-3-1990 } (ஒம்) **E.Z. செல்வநாயகம்**

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker:Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9-15 P. M.
Thursdays-9:00 to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
All Correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2:45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M.
Fridays -2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker: P. R. Swamy.
All Correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
All correspondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

**KANNADA** The Voice of Truth-Speaker:Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2-00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருமறை ஆசான் வாசகர்களின் முகவரிகளை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இதுவரை தங்கள் முகவரிகளை எழுதி அனுப்பாதவர்கள் உடனே அனுப்பி உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். நம்முடைய விலாசம் தான் அவர்களுக்குத் தெரியுமே என்று மெத்தனமாக இராதீர்கள் தயவு செய்து ஒத்துழையுங்கள். நன்றி.

1. பெயர் 2. முழு முகவரி
3. பின்கோடு 4. மாவட்டம்

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press.
Erode-638 003.
Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor:
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE - 638 001.